உதவி அமர்வு நீதிமன்றம், மேலூர்

S.C No.665 /2023

பெயர் :திருமதி.முருகுபொற்செல்வி(அ.சா.12)
தகப்பனார் பெயர் :
கணவர் பெயர் :டாக்டர்.கருணாகரன்
வயது :57
கிராமம் :மதுரை
வட்டம் :மதுரை
தொழில் :அரசு இராசாசி மருத்துவமனை, மதுரை உதவி நிலைய மருத்துவர்

சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் விசாரிக்கப்பட்டார்.

03.02.2026

முதல் விசாரணை:

நான் மதுரை அரசு ராசாசி மருத்துவமனையில் அவசர சிகிச்சை பிரிவு மருத்துவராக பணியில் இருந்த போது, கடந்த 26.06.2017 அன்று இரவு 8.55 மணியளவில் அழகுமணி (31வயது) S/o நாகு, அரும்பனூர் மதுரை என்பவர் பிரபு மற்றும் ஜெகதிஸ் என்ற அவரது உறவினரால் அழைத்துவரப்பட்டார். போலிஸ் மெமோ ஒன்றும் அவர் எடுத்துவரவில்லை. அவர் தன்னை 5 தெரிந்த நபர்கள் வீட்டின் அருகே கல் மற்றும் கம்பியால் அவர் வீட்டருகே இரவு சுமார் 8.00 மணியளவில் தாக்கப்பட்டதாக என்னிடம் தெரிவித்தார். அவரை நான் பரிசோதித்த போது அவருக்கு நல்ல சுயநினைவு இருந்தது. அவர் நெற்றி மைய முன்பகுதியில் 2x 1 c.m அளவில் வெட்டுக்காயம் இருந்தது. அவரது வலது முழங்கையிலும், உள்ளங்கையிலும் இரத்த சிராய்ப்பு காயம் இருந்தது. அவருக்கு தலையின் நுண்கதிர் படம் எடுக்க அறிவுறுத்தினேன். அதன்பிறகு அவரை வார்டு 99ல் உள்நோயாளியாக அனுமதித்தேன். அவருக்கு நான் தான் விபத்து பதிவேட்டை பதிவு செய்தேன். அவருக்க நான் சான்றளிக்கவில்லை. ஏனென்றால் அவர் சொல்லிக்காமல் மருத்துவமனையில் இருந்து அவராகவே வெளியேறிவிட்டார். மேற்படி விபத்து பதிவேடு ஆனது அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது. அவருக்கு ஏற்பட்ட காயங்கள் அவர்

குறிப்பிட்டுள்ள கம்பி மற்றும் கல்லால் ஏற்பட வாய்ப்புள்ளதா என்றால் வாய்ப்புள்ளது.

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :

நான் அழகுமணிக்கு நேரடியாக சிகிச்சை அளிக்கவில்லை என்றால் சரிதான். மேற்படி காயங்கள் அவர் தன்னிச்சையாக திண்டோ, அல்லது கடுமையான பகுதிகளில் மோதினால் ஏற்பட வாய்ப்புள்ளதா என்றால் வாய்ப்புள்ளது.

மறுவிசாரணை : இல்லை.

SAMUNDESWARIPRABHA Digitally signed by SAMUNDESWARIPRABHA Date: 2026.02.03 21:47:09 +0530

Assistant Session Judge

Melur